[1982 ஏப்ரல் 7

சில பொருட்களுக்கு மாநில அரசால் வசூலிக்கப் படும் விற்பனை வரி.

* வினா எண். 778—திரு. என். வரதராஜ்ன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—(அ) சில பொருட்களுக்கு மாநில அரசு விற்பனை வரி வசூலிப்பதை கைவிட வேண்டுமென்றும், மத்திய அரசு அப்பொருட்களுக்கு வரி விதிக்கும் எனவும் அறிவித்துள்ளார்களா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது தமிழக அரசு மேற்கொண்டுள்ள நிலை என்ன?

மாண்புமிகு திரு எஸ். டி சோமசுந்தரம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். அப்படி ஒரு கருத்து மைய அரசில் இருந்து வருகிறது. (ஆ) விற்பனை வரிக்குப் பதிலாக கூடுதல் ஆயத்தீர்வை விதிக்கும் திட்டம் மத்திய அரசினால் செயல்படுத்தப்பட்டால் மாநிலங்களனைத்தும் உள்ளாட்சி மன்றங்களின் தரத்திற்கோ அல்லது மத்திய அரசின் நிர்வாகப் பிரிவின் சாதாரண தரத்திற்கோ குறைக்கப்பட்டு விடும் என்றும் இத்திட்டத்தை மத்திய அரசு கொண்டு வருவதை மாநில அரசு எதிர்க்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல. இந்தத் திட்டத்தினால், மாநில அரசுக்கு இருக்கின்ற வரி விதிக்கின்ற அதிகாரம் தடை செய்யப்படுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல. அரசியல் சட்டத்தில் மாநிலங்களுக்கு கொடுக்கப்படுகிற அதிகாரத்தை தடை செய்வதாகவும் இந்த முறை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு பாபு ஜனார்த்தனன் ; பேரவைத் தலைவர் அவர்களே, சில பொருள்களுக்கு மாநில அரசு வரி நீக்கம் செய்வதாகவும் ஆனால் அதே பொருள்கள் மீது மத்திய அரசு வரி விதிப்பதை மாநில அரசு எதிர்க்கின்றது என்றும் ஒரு கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதைத் தீர்மானமாக நிறைவேற்றி, மாநில மக்களின் கருத்தை மத்திய அரசுக்கு அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தீர்மானமாகப் போட்டு அந்தத் தீர்மானத்தை அனுப்புகின்றபோது அது தீர்மானமாகத் தான் அவர்களுக்குத் தெரியும். அதைவிட, மத்தியிலே 1980 செப்டம்பர் 16, 17 தேதிகளில் நடந்த முதலமைச்சர்கள் மகாநாட்டில், முதலமைச்சர் அவர்கள் சார்பிலே

கலந்துகொண்ட வருவாய்த் துறை அமைச்சரால் இவைவிடக் கடுமையாக நேருக்குநேர் சொல்லப்பட்டிருக்கிறது என்பதையும் இதை எழுத்து மூலமாக அச்சிட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி ; தலைவர் அவர்களே, மத்திய அரசு சில குறிப்பிட்ட பொருள்களின்மீது மாநில அரசு விற்பனை வரி போடுவதைத் தாங்கள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்வதற்குக் காரணம் என்ன? மாநில அரசு இந்தப் பொருள களின் மீது விதிக்கும் விற்பனை வரி போதாது என்று அவர்கள் கருதுகிறார்களா? அல்லது மத்திய அரசு தானே எடுத்துக் கொண்டு, மாநில அரசின் வருமானத்தைக் கொஞ்சம் குறைக் கலாம் என்று அவர்கள் பார்க்கிறார்களா? அவர்கள் எத்தனைப் பொருள்களை அப்படி எடுத்துக் கொள்வதாகத் தீர்மானித் திருக்கிறார்கள்? மேலும், அதன்மூலம் எவ்வளவு வரி வருமானம் மாநில அரசுக்குக் குறையும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வரவு செலவு கணக்கைப் பற்றிச் சொன்னார்கள். வரவு-செலவுக் கணக்கை விட, மாநிலங்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தை மத்திய அரசு எடுத்துக் கொள்கிறது. எத்தனை பொருள்களை எடுத்துக் கொள்கிறது? அதனால் எவ்வளவு பணம் நஷ்டம் என்பதைவிட, அவர்கள் அவ்வாறு எடுத்துக்கொள்வது சரியாக இல்லை. அவர்கள் அப்படி ரூ. 100 எடுத்துக்கொள் வதாக இருந்தாலும், அதை எதிர்க்கிறோம். விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது அவர்கள் 5 பொருள்களை எடுத்துக் கொள்வ தென்றும், அந்த 5 பொருள்கள் மூலம் 106 கோடி ரூபாய் மாநில அரசு வரி வசூலிப்பதை அவர்கள் எடுத்துக் கொள்ள முயற்சி செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு குமரி அனந்தன் ; மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, 106 கோடி ரூபாய் வரி விதிக்கின்ற அதிகாரத்தை எடுக்கக் கூடாது என்பதோடு, மாநில அதிகாரம் குறையக்கூடாது என்பதை நமது அரசாங்கம் முடிவு செய்திருப்பதைப் பாராட் டுகிறேன். நம்மைப் போலவே, மாநிலங்களின் அதிகாரம்குறையக் கூடாது என்று கேட்டிருக்கின்ற வேறு அரசாங்கங்கள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலும், மத்தியிலும் ஒரே சமயத்தில் ஒரே கட்சியினுடைய ஆட்சி இருக்கிறது. சில இடங்களில் மாறி மாறி இருக்கின்றன. பேசுகின்றபோது, முதலிலே எல்லா மாநிலங்களும் அதிகாரங்களை விடக்கூடாது என்று எல்லா முதலமைச்சர்களும் முதலிலே தெரிவிக்கிறார்கள் அதற்குப் பிறகு, என்ன காரணமோ கட்சியின் ஆணைக்கு கட்டுப்பட்டு, விட்டு விடுகிறார்கள் என்று கருதுகிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருந்து வரக்கூடிய 106 கோடி ரூபாய் மத்திய அரசு எடுத்துக்கொள்ளும் என்று சொல்லப்பட்டது. உண்மையிலேயே மத்திய அரசாங்கமானது தமிழ்நாட்டில் இப்போது பொருளாதாரச் சிக்கலை உண்டாக்கி, அதன்மூலம் அவர்கள் லாபம் பெற விரும்புகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மூலக் கேள்விக்கு முதலிலே படிக்கின்ற போது விளக்கமாக பதில் கொடுத்திருக்கிறேன். இப்படி எடுத்துக் கொள்வதால், மாநில அரசுகள் ஒரு முனிசிபாலிடியாக, குளோரிஃபைட் முனிஸிபாலிடியாக ஆக்குகின்ற திட்டம்தான் என்பதையும், மேலும் இப்படி எடுத்துக்கொண்டால் மாநில அரசு மத்திய அரசின் ஒரு நிர்வாக யூனிட்டாக, அட்மினிஸ்டிரேடிவ் யூனிட்டாக ஆக்குவதாக ஆகும் என்பதை முதலிலே படித்துக் காண்பித்திருக்கிறேன்,

தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட கிராமங்களில் பட்டாக்கள் வழங்கும் திட்டம்

* வினா எண். 779—திரு. செ. செம்மலை: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமங்களில் வீட்டுமனைப்பட்டா நிலப்பட்டாக்கள் வழங்குவது நிறுத்திவைக்கப்பட்டிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அதன் காரணம் யாது?

(இ) உடனடியாக பட்டாக்கள் வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்:—(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட 16 கிராமங்களில் பாப்பம்பாடி, மானத்தார் ஆகிய இரு கிராமங்களும் தடையாணைக்கு உட்படாதவை என்றும், தசவிளளுகு அழகு